# மற்றுமொரு மாலை



செ.சுதர்சன்

ப்
சி
ப
ர்
த்
று.
ந்
க்

கப்
னங்
ந்து
லை.
ரியல்
வனப்
லை
ரயில்
தால்
மலே
டில்,
கொடு

# மற்றுமொரு மாலை

செ. சுதர்சன்

ஏகலைவன் வெளியீடு
உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்

# மற்றுமொரு மாலை

(கவிதைத் தொகுதி)


ஆசிரியர் : செ.சுதர்சன் ©
முகவரி : சிவசம்புப் புலவர் வீதி, உடுப்பிட்டி
பதிப்பு : முதற்பதிப்பு, 21 ஜுலை 2004
வெளியீடு : ஏகலைவன் வெளியீடு, உடுப்பிட்டி
அச்சு : ரெக்னொ பிரின்ட், கொழும்பு
ஓவியம் : எஸ்.நேசலிங்கம் (நேசன்)
விலை : **100.00**


# *Mattumoru Malai*

***(Collection of Poems)***


Author : S. Sutharsan ©
Address : Sivasampup Pulavar Veethy, Uduppiddy
Edition : First Edition, 21 July 2004
Printers : Technoprint, Srilanka
Art : S. Nesalingam (Nesan)
Price : **100.00**


*அப்பாவுக்கு...*

# சமுதாய உணர்வுகளுடன் ஒன்றிப்போகும் ஒரு கவிஞன்

எழுத்தாளர், கவிஞர், விமர்சகர், பேச்சாளர், விவாதத் திறமை கொண்டவர் எனப் பல்வேறு திறமைகளையும் தமதாக்கிக் கொண்ட ஆளுமைக்குரிய பல்கலைக்கழக மாணவராகச் சுதர்சன் திகழ்கிறார். இவ்வாறு சகல திறமை களையும் ஒருங்கே கொண்ட மாணவர்களைக் காண்பது அபூர்வமாகவே தோன்றுகின்றது. தமது பாடக்குறிப்புகளைத் தவிர வேறு எதனையும் வாசிக்க மாட்டோம் எனச் சபதம் பூண்டவர்களைப் போலப் பல்கலைக்கழக மாணவர் பலர் விளங்குவது எனக்குச் சலிப்பையேயூட்டி வந்திருக்கிறது. இத்தகையோர் மத்தியில் இவர் போன்ற மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் தரத்தைப் பேணும் முறையில் இயங்குவது மகிழ்ச்சியையும், மனத்திருப்தியையும் ஏற்படுத்து கிறது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவர் கால் வைத்த நாள் தொட்டு, கல்வியிலும் சோடை போகாமல், எழுத்துத் துறையிலும் சளைக்காமல் இயங்கி வந்திருக் கிறார். பல்கலைக்கழக மட்டத்தில் இடம்பெற்ற கவிதைப் போட்டி, பாடல் இயற்றும் போட்டி, சிறுகதைப் போட்டி, பேச்சுப்போட்டி முதலியவற்றில் அவர் விருதுகளையும், தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக விவாத அணியிலும் கடந்த

மூன்று ஆண்டுகளாக இடம்பெற்றுள்ளார். இந்துதருமம் என்ற பல்கலைக்கழக இதழின் இணையாசிரியருள் ஒருவராகத் திகழ்ந்து, சிறந்த இதழை வெளிக்கொணர்ந்துள்ளார். ஞானம் சஞ்சிகையில் சமகாலக் கலை இலக்கிய நிகழ்வு களைச் சுவையாகப் பத்தி எழுத்துகளாகத் தந்துகொண் டிருக்கிறார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஏகலைவன் என்ற சஞ்சிகையின் இணையாசிரியராகவும் இவர் விளங்கு கிறார்.

இத் தொகுதியிலுள்ள சுதர்சனின் கவிதைகளை நுகர் ந்து பார்க்கும்போது, இவை அனைத்தையும் கவிஞர் தமது உணர்வுகளில் எழுதுகோலைத் தோய்த்து எழுதியுள்ளமை புலனாகின்றது. பேனா வெறும் கருவியாகவே இங்கு தொழிற் பட்டிருக்கிறது. இவரது கவிதைகளில் இலங்கைத் தமிழ் மக்களினது சோகத்தின் நிழலும், துயரத் தொனியும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சமுதாய உணர்வுகளுடன் ஒன்றிப்போகும் ஒரு கவிஞனுக்கு இது இயல்பானதே. சுதர்சனின் கவிதை களிற் சில, அவரது கொள்கைப் பிரகடனங்களாக விளங்கு கின்றன. இலங்கையின் இனப்பிரச்சினை, போர்ச்சூழல், பேரினவாதம், அரசபயங்கரவாதம் முதலியவற்றின் பின்னணி யில் பல கவிதைகள் அமைந்துள்ளன. இவற்றோடு, பன்முகத் தன்மை வாய்ந்த அவரது பிற கவிதைகளும் இடம் பெற்றுள் ளன.

இத்தொகுதியில் சுதர்சனின் இரு கவிதைகள், அவரது கொள்கைப்பிரகடனமாக விளங்குகின்றன. உறுதிகோரல். எழுதுகோலுக்கு ஓர் ஏற்றப்பாட்டு ஆகியவையே அவை. இவற்றுள் பின்னையது மிகச் சிறப்பாக அமைந்ததொரு கவிதை.

*"எங்கெல்லாம் அநீதி*
*எங்கெல்லாம் அடிமைநிலை*
*எங்கெல்லாம் பொய்யின் பூ*
*பூக்கின்ற வேளைகளில்*
*என் குருதி கொதிக்கட்டும்*
*எனைக் குமுற வைக்கட்டும்*
*என் பேனாப் பீரங்கி*
*இடியெழுப்பி முழங்கட்டும்"*

என்ற வரிகள்,

*"தாக்கும் போதெல்லாம்*
*நான்*
*தவ வலிமை பெறுகின்றேன்*
*தூற்றும் போதெல்லாம்*
*நான்*
*துறவு நிலை அடைகின்றேன்"*

என்னும் வரிகள், அவரது எழுதுகோலின் வலிமையை எடுத்துரைப்பவை.

இக்கவிதையின் இறுதியில் இடம்பெறும் "*கவியரசாய் நிலைத்திடுவேன்*" என்ற தன்னம்பிக்கை மிக்க தன்னுணர்ச்சி வரி, அவரது எதிர்கால வளர்ச்சிக்குரிய ஆளுமையை இனங்காட்டுகின்றது. "*காற்றின் காதலி*" என்ற படைப்பு கவிஞர் கவிதை எழுத அமர்ந்த ஒரு சந்தர்ப்பத்தில் காற்று நிகழ்த் திய அட்டகாசத்தில் பிறந்த கவிதையாகத் தெரிகிறது. காற்று அழகாகவே அந்தக் கவிதையைக் கொண்டுவந் திருக்கிறது. அந்தக் கவிதையின் இறுதி வரிகள் மனத்தைக் கவர்கின்றன:

*"இதழ் தொட்டுப் பிடித்து*
*ஒருவரி எழுதமுன்பு*
*எட்டிவந்த காற்று*
*தாளை எடுத்துத் தரையிலே போட்டுக்*
*கட்டிப் புரட்டிக் கலவி செய்தது*
*கெட்டுப் போகவில்லை*
*காற்றும் காதலிக்கும் என் கவிதை"*

இந்நாட்டின் அரசியல் வரலாற்றின் உயிர்மூச்சாகப் பேரினவாதமே செயற்பட்டு வந்துள்ளது. இதனை இனங் காட்டும் பல்வேறு சம்பவங்கள் இந்தத் தேசத்தில் நிகழ்ந்து விட்டன. இவற்றுள் முக்கியமானது 1983 கறுப்பு ஜூலை. அரசியல்ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் இலங்கைவாழ் தமிழ்மக்களை அடக்கவெனப் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இக் கறுப்பு ஜூலை அசம்பாவிதங்களின் பின்னணியை நினைவூட்டும் முறையில் அமைந்த கவிதை "இரவு போதும்" என்பதாகும். விடிந்தால் கறுப்பு ஜூலை. ஆகவே, அதன் முன்னர் இரவு விடியாமலே இருக்கட்டும் என்று அக்கவிதை ஒலிக்கிறது. இந்நாட்டில், தமிழ்மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தின் கொடூ

ரச் சுவடுகளை இனங்காட்டும் அருமையான இன்னொரு படைப்பாகக் "கல்வாரிப் பயணம்" என்ற கவிதை காட்சி தருகின்றது.

எண்பதுகளின் பிற்பகுதியில் இலங்கையில் "சமாதானத்தை" ஏற்படுத்தவென "இறக்குமதி" செய்யப்பட்ட இந்திய அமைதிகாக்கும் படை (?) இந்நாட்டுத் தமிழ்ப் பிரதேசங்களிற் செய்த அட்டூழியங்கள் உலகம் அறிந்தவை. அந்த அநியாயப்படை செய்த கொடூரங்களைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட அமைதியான கவிதை, "சடத்திலும் ஜீவன்". கவிதையைப் படிக்கும்போதே, அதன் பின்னணியைப் புரிய வைக்கிறார், கவிஞர்.

"காற்றை நனைக்கும்
சிகரெட் நாற்றம்
பழைய சப்பாத்தியோடு சேர்ந்து
ஒக்ஸிஜினை உறிஞ்சிக் கொள்ளும்

உணர்வுகளைத் தூக்கிலிடும்
சப்பாத்துகளின்
'டக்... டக்...'

தலைப்பாகை.
தாடி.
ஏ. கே. 47

ஜன்னல் கண்ணாடியூடு
நிழல்களின் அச்சுறுத்தல்
வேட்டைக்கு ஏகும்
குருநானக் சிஷ்யர்கள்"

என, "இந்திய அமைதிகாக்கும் படை"யை இனங்காட்டுகிறார், சுதர்சன். தங்கள் ஜனநாயகம் பற்றித் தமக்குள்ளே பெருமை பேசிக்கொள்ளும் இந்திய அரசியலாரும், தங்கள் படையின் நியாயத்தன்மை பற்றி (இந்தியப்படை இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களில் அட்டூழியங்கள் நிகழ்த்திய காலத்தில்) பெருமை பேசிய ஜெயகாந்தன் போன்ற எழுத்தாளர்களும், இலங்கைத் தமிழரின் நியாயமான போராட்டங்களைக் கொச்சைப்படுத்தும் இந்தியப் பத்திரிகையாளரில் ஒருசாராரும் இந்தக் கவிதையை ஒருமுறையாவது படித்துப் பார்க்கவேண்டும். அப்போதும் அவர்களது நெஞ்சு சுட வில்லையாயின், அவர்கள் மனிதர்களே அல்லர், வெறும் சடங்களே.



இலங்கையின் பேரினவாதம், அரசபயங்கரவாதம், போர்ச்சூழல் முதலியன ஆயிரக்கணக்கானவரின் இறப்புக்குக் காரணங்களாக அமைந்ததோடு, இன்னும் ஒரு பகுதியினரை அங்கவீனர்களாகவும் ஆக்கின. அத்தோடு, பெண்களில் ஒருசாராரை அனாதைகளாக, அபலைகளாக ஆக்கிவிட்டன. எப்போதுமே போர்ச்சூழல் அபலைகளின் உருவாக்கத்துக்குக் காரணமாய் அமைந்துவிடுகிறது. சுதர்சனின் "அபலை — I" என்ற கவிதை, போர்ச்சூழலின் பின்னணியில் நிர்க்கதிக்கு உள்ளான அபலைப்பெண்ணொருத்தியின் வேதனையுணர்வை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துகிறது.

போர்ச்சூழலின் பகைப்புலத்தில் ஒரு தாய்க்கும், போராளியாக விளங்கும் அவளது மகனுக்கும் இடையிலான சந்திப்பைக் கலாபூர்வமாகக் "காத்திருப்பு" என்ற கவிதை காட்டுகிறது.

"நேற்றுப் போலில்லை
அந்தத் தெரு

கிளுவை மர இலைகள்
உடைத்துப் போடும்
நிலா ஒளி

அதன் மேல்
பிய்ந்து....
அசையும் மெல்ல
மனித நிழல்

கிடுகு வேலியின்
சரசரப்பு
'சர்.....' என்று சொரியும்
கறையானின் மண்
அவளுக்கு
ஆட்காட்டிக் குருவிகளாய்.....

மகனுக்காய்
மணச்சட்டியில்
அவித்த

மரவள்ளிக் கிழங்கோடு
இந்த இரவிலும்
வழமைபோல
"ச்ச்ச்..."
பல்லி மட்டும் சொல்லியது
"இனி
படைக்க வேண்டியது தான்"

என்று வரும் கவிதை வரிகள், மிக அற்புதமாகப் பாசத்தின் நிழலை இனங்காட்டுகின்றன.

இத்தொகுதியில் இடம்பெற்ற இன்னொரு சிறந்த கவிதை 'கிராமத்துக் கனவுகள்'. கிராமத்தின் எழிலைப் போர் நிர்மூலமாக்கிய நிலையை, இக்கவிதை கலைத்திறனோடு புலப்படுத்துகிறது. இக்கவிதையில் கிராமியம் தன்னைச் சிறப்பாக இனங்காட்டிக் கொள்கிறது. ஒரு தேர்ந்த கவிஞனுக்குரிய அளவற்ற ஆற்றலுடன் இக்கவிதையைப் படைத்திருக்கிறார், சுதர்சன். கிராமத்தின் பேரழகை முதலில் இனங்காட்டிவிட்டு,

"உருக்குலைந்து
உன் பொட்டிழந்து
கட்டழகு மேனியிலே
இரத்தக் கறைபடிந்து
காடாய்க் கிடக்கும் உந்தன்
கதை படித்துத் திரும்புகையில்
பாடாய்ப் படுத்தும் நெஞ்சு சுமக்கிறேன்

வட்டிழந்த பனைமரத்தில்
செருக்கு எங்கே?
கட்டுடைந்த கழனிகளில்
திலகமெங்கே?
குண்டு பட்டுடைந்த பண்ணைகளில்
பரிவு எங்கே?
உன் கட்டழகுக் கைகளாய்
நாம் கதைபடித்த தெருக்களெங்கே?

அத்தனையும் அழிந்த
என் அனாதைச் சிற்றூரே!



சற்றும் உனைப் பிரியமனம்
மறுக்கிறது
சரி. கடமை
கற்று முடித்து
உன் கதைவடிக்கக்
காற்றாகி நான் வருவேன்
காத்திருப்பாய்...."

என முடிகிறது, கவிதை.

போர்ச்சூழலின் பின்னணியில் கலைத்திறனோடு அமைந்த சிறந்த கவிதைகளுள் ஒன்றாக "நெடும் பகல் நோக்கி" திகழ்கிறது. படித்துச் சுவைக்க வேண்டிய அருமையான கவிதை. இக்கவிதையில் யாழ்ப்பாணம் அப்படியே கண் முன்னே விரிகிறது. எல்லாவற்றையும் போர் அழித்துவிட்ட போதிலும், அப்புவின் எதிர்கால நம்பிக்கை மாத்திரம் அழியவில்லை.

"இன்று நலிந்து
இனிப் பிறக்கும் நாளையிலும்
பிஞ்சுகள் விழலாம்
பூக்கள் உதிரலாம்
கஞ்சியும் இன்றி
வாழ்க்கை ஓடலாம்
நெஞ்சுகள் நிமிர்த்தயென்
பேரன் பிறப்பான்"

என்ற நம்பிக்கையுடன், "நின்றும் இருந்தும் நீட்டிப்படுத்தும் 'நேர்த்தியின்' நினைவுடன் நெடும்பகல் நோக்கி" இயங்கும் அப்பு ஓர் அருமையான பாத்திரம். மஹாகவியின் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற கவிதையில் வரும் விவசாயியின் தன்னம்பிக்கையை இக் கவிதையில் வரும் அப்புவிடமும் காணமுடிகிறது.

இத் தொகுதியில் இடம்பெறும் இனப்பிரச்சினை, போர்ச் சூழல் தொடர்பான சிறந்த பிற கவிதைகளாக ஊழின்மீதான பாடல், மாறுதல், குளிர்காய்தல், கள்ளுக்கபாலம், தக்காரை வாழ வைப்போம் என்பன விளங்குகின்றன. இலங்கைத் தமிழரின் ஒரு காலகட்ட அரசியல் வரலாறு, பேரினவாதிகளால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறாகவே விளங்குகிறது. இலங்கைத் தமிழரின் கடந்தகால அரசியல் வரலாற்றை "நாங்கள் பைத்தியங்கள்" என்ற கவிதை இனங்காட்டுகின்றது. "உறக்

சுத்தின் ஓசையிலே" என்னும் கவிதை, நோர்வேயின் சமாதான முயற்சிகளின் பின்னணியில் எழுதப்பட்ட கவிதையாகக் காட்சி தருகின்றது. கடந்த இரு ஆண்டுகளில் (2002, 2003) இந்நாட்டில் தமிழர் அனுபவிக்க முடிந்த ஓரளவு நிம்மதியை மிக அற்புதமாக இக்கவிதை பதிவு செய்கிறது.

"வேண்டும் வேண்டுமென்று
விழித்துத் தவமிருக்க
வாணி இறங்கி வந்தாள்
வலக்கை வீணையொடு

இருத்திக் கொடுக்க அல்ல
இசைத்துக் கொடுப்பதற்கு
பசித்துக் கிடந்த
எங்கள்
பசிக்கு இரையை அவள்
பாட்டில் வடிப்பதற்கு

வேட்டு வரைந்த துயர்
வெட்டிவிலக்க
இசை
மீட்டால் மிடுக்கு வரும்

கேட்டால் கிலுகிலுக்கும்
பாட்டால்
பாரிலிவள்
போட்டாளே ஓர் பூட்டு!
இடியொழிந்து இங்கிதமாய்
இசைபிறந்த தெப்படியோ?

கடிமலிந்த கற்களிவை
பொடிபொடியாய்ப் போகும்படி
இடியொழிந்து இங்கிதமாய்
இசைபிறந்த தெப்படியோ?
நாட்டு நரம்புகளை
நல்லபடி இழுத்து
இவள்
கோட்டில் வளைத்து
கொளுவிப் பிடிதிருகி
ஒரு பாட்டு வடித்தாள்"



என அமைந்த வரிகள், பாரதி பரம்பரைக் கவிஞராகச் சுதர்சனை இனங்காட்டுகின்றன.

இவற்றைவிட, வேறு சில கவிதைகளும் இத் தொகுதியில் குறிப்பிடத்தக்க படைப்புகளாக விளங்குகின்றன. "சுயம்?" என்ற கவிதை, மனிதனின் சுயத்தைக் கேள்விக் குறியாக்கி நோக்குகிறது. "நம்பிக்கை" நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் நம்பிக்கை ஒளிர்வதை இனங்காட்டுகின்றது. "மற்றுமொரு மாலை", "அனலென மனதும்" ஆகியவை கவிஞரின் அழகியலுணர்வின் பிறிதொரு பரிமாணத்தைத் தொட்டு நிற்கின்றன. இவையும் சுதர்சனின் படைப்பாற்றலுக்குச் சான்று பகர்கின்றன. "இரவுகள் எழுதிய கவிதை"யும் கலாபூர்வமாக அமைந்த ஒரு படைப்பு. "உண்பதற்கு மட்டுமோ உனக்கு விடியல்?" என்பதும் இன்னொரு சிறந்த படைப்பாகும். இக்கவிதையின் இறுதிப்பகுதி, அதன் தொனியை உச்சத்துக்குக் கொண்டு செல்கிறது.

"பால்பொங்கும்
பொங்கற் பானை தனைக்கண்டால்
நாம் பொங்கிக் களிப்போம்
நாம்
பொங்கியெழவேண்டிய பொழுதெல்லாம்
பொங்கியெழாமல்
போர்த்துப் படுத்திருப்போம்
சூரியனைக் கேட்டேன்"

"இரவுக்காய்ப் பகல் உழுதாய்
அந்நன்றிக்காய்
நாம் சமைக்கும்
பொங்கலை நாடித்தான்
நாளைக்கும் வருவாயா?"

சுட்டெரிக்கச் சொன்னான்

"உண்பதற்கு மட்டுமோ
உனக்கு விடியல்?"

இவ்வரிகள் சுதர்சனின் கவியாற்றலை மேம்படுத்திக் காட்டுகின்றன. இத்தொகுதியின் இன்னொரு குறிப்பிடத்தக்க கவிதையாக விளங்குவது, "இரண்டு மாடுகளின் பயணம்".

சுதர்சனின் கவிதைகளுக்கு ஒரு பொதுவான இயல்பு உண்டு. தாம் கூறவந்தது இதுதான் என்று வெட்ட வெளிச்சமாகவே தெரிவித்துவிடாது, கவிதையின் போக்கிலேயே அதன் தொனியையும், பொருளாழத்தையும் வாசகர் உணர்ந்துகொள்ளுமாறு செய்வது. இவ்வாறு அவர் கவிதையை நடத்திச்செல்லும் பாங்கு குறிப்பிடத்தக்கது. அதனால், வாசகர் சிலவேளைகளில் பல தடவைகள் அவரது கவிதைகளைப் படிக்கவேண்டி வரலாம். சுதர்சனின் கவிதைகள் மீதான வாசகரின் புரிதல் முயற்சிகள், அவரது படைப்புகள் மீதான ஆழ்ந்த அனுபவத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும் என நினைக்கிறேன். இதன் வாயிலாக, சுதர்சன் என்ற கவிஞனின் படைப்பாற்றல் உச்சம் பெறுவதை அவதானிக்க முடியும்.

இந்நூலில் இடம்பெறும் ஓவியங்கள், சுதர்சனின் கவிதைகளோடு சரிசமமாகப் போட்டியிடுகின்றன. ஓவியங்களை வரைந்த ஓவியர் எஸ். நேசலிங்கம் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் உரியவை.

இத்தொகுதியிலுள்ள சுதர்சனின் கவிதைகள் அவசர கோலத்தில் படைக்கப்பட்டவை அல்ல என்பது திருப்தியைத் தருகிறது. ஓரிரு கவிதைகள் சாதாரணமானவையாகக் காணப்படினும், பெரும்பாலானவை கனதியாகவே காட்சி தருகின்றன. இலங்கையில் பெயர் சுட்டக்கூடிய தரமான இளம் கவிஞர்களுள் ஒருவராக அவர் தம்மை இனங்காட்டிக் கொள்கிறார். ஆசையின் உந்துதலால், தரத்தைப் பற்றிக் கவனத்திற் கொள்ளாது ஆண்டுதோறும் வெளியிடப்படும் பல கவிதை நூல்களுள் நின்றும் மாறுபட்டு, தரம்பேணி வெளிவருவனவற்றுள் ஒன்றாக "மற்றுமொரு மாலை" என்ற இந்த நூல் விளங்குவது மகிழ்ச்சிக்குரியது. "வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலே தெரியும்" என்பர். வாழப்போகும் ஒரு கவிஞனை இந்த முதல் தொகுதி மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**கலாநிதி துரை. மனோகரன்**

தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை, இலங்கை.
7.6.2004



# கவிதை முத்துக்கள் சொரியட்டும்

இக்கவிதைத் தொகுதியின் ஆசிரியர் செ.சுதர்சன் ஈழத்தின் இளந்தலைமுறைக் கவிஞர்களில் ஒருவர். ஞானம் கலை இலக்கியப் பண்ணையில் வளர்ந்துவரும் கவிஞர்களில் முக்கியமானவர். இவரது கவிதைகள் பல ஞானம் சஞ்சிகையில் வெளியாகி வாசகர்களினதும் இலக்கியவாதிகளினதும் பெரும் பாராட்டைப் பெற்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விசேட துறையில் பயிலும் இவர், தமிழ்க் கவிதை மரபு பற்றிய பரிச்சயம் உள்ளவர். இதனை இவரது கவிதைகள் பறைசாற்றுகின்றன. இவரது புதுக் கவிதைகளில்கூட சந்த உணர்வும், கவித்துவ வீச்சும் மிளிர்கின்றன.

செ.சுதர்சன் எடுத்தாளும் பாடுபொருள் வாழ்க்கை அநுபவங்களோடும் மனித அபிலாசைகளோடும் தொடர்புடையனவாக இருப்பதால் வாசகர் மனதை ஈர்க்கவல்லனவாக அமைந்துவிடுகின்றன.

"குருதிகள் எம்மண்ணில்
சுந்தாத வரம் கேட்போம்
பரிதியை நாம்தொட்டுப்
பந்தாட விடை கேட்போம்"

போன்ற எளிய சந்தங்கள், எளிய பதங்கள் அமைந்த இவரது கவிதைகள், இவரின் கவிதாவிலாசத்துக்கு ஆழமான தரிசன வீச்சைத் தருகின்றன.

செ.சுதர்சனின் எழுத்துலகம் விசாலமானது. சமூகம் பற்றிய பிரக்ஞையும், மானுடம் மேன்மையுற வேண்டும் என்ற உணர்வும் கொண்ட சுதர்சன், ஞானம் சஞ்சிகையில் 'சமகால இலக்கிய நிகழ்வுகள்" என்ற மகுடத்தில் பத்தியெழுத்துக்களையும் எழுதிவருகிறார். மற்றுமொருமாலை என்ற இக்கவிதைத் தொகுதி வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. செ.சுதர்சனின் பேனா முனையிலிருந்து இன்னும் பல கவிதை முத்துக்கள் சொரியட்டும். வாழ்த்துக்கள்!

தி.ஞானசேகரன்

பிரதம ஆசிரியர்,
'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை,
19/7 பேராதனை வீதி,
கண்டி.
27.06.2004

# வார்த்தைகளை வரிந்து கட்டிக்கொண்டு...

"என் மகனே
என் வார்த்தைகளைக் கவனி
என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்
அவைகள்
உன் கண்களைவிட்டுப் பிரியாதிருப்பதாகுக
அவைகளை
உன் இருதயத்துக்குள்ளேயே காத்துக்கொள்"

**(Prov - 4:20-21)**

"மற்றுமொருமாலை" எனது முதலாவது கவிதைத் தொகுதி. சடத்திலும் ஜீவன் என்ற பெயரோடு வெளிவர இருந்ததே மற்றுமொருமாலையாகியது. நான் மாணவனாக இருக்கும் காலத்தில் இதனை உங்களுக்குத் தருகிறேன். 99களிற்குப் பின்னர் நான் எழுதிய கவிதைகள் இதில் உள்ளன. ஓரிரு கவிதைகள் தவிர்ந்த அனைத்தும் அவ்வப் போது பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளியர்கியவை. நீங்கள் வாசித்தவையே. "என் தேசத்தில் நான்" என்ற எனது தொகுப்பு நூலில் வெளிவந்த இருகவிதைகளும் இதில் உள் ளன. இந்த நூலின் ஒருமைப்பாடு கருதி வெளிவந்த கவிதை களில் ஒன்றிரண்டைச் சிறிது செம்மைப்படுத்தியுள்ளேன்.

எனது தேசம் அவல அடுக்குகளால் ஆகியது. அதில் அவ்வப்போது எழுந்தவலிகள் ஓலங்கள் முதலியவையே எனது பெரும்பாலான கவிதைகள். அவற்றில் யுத்தம் நிர்மூல மாக்கிய கனவுகள், கடந்தகால சமகால அரசியல் சமூக நிகழ்வுகளின் அபத்தங்கள் முதலானவற்றின் பிம்பங்களை நீங்கள் காணமுடியும். சமூகம், குடும்பம், தனியன் என்ற ஒவ்வொன்றுக்குமான பிரச்சினைகளை என் உணர்வுகளும் பிரதிநிதியாக நின்று பேசியுள்ளன. சில "பொதுமை"யானவை. ஓரிருகவிதைகள் கவியரங்கப்பாணி கொண்டவை.

எனக்குப் பராயம் தெரிந்த காலத்திலிருந்து இடம் பெயர்வே நிரந்தரமாகியது. துப்பாக்கியின் குரலும், அழுகையுமே இயற்கையாயிற்று. பல தடவைகள் யாழ்ப்பாணத்தின் ஏனைய இளைஞர்களைப் போலவே மரணத்தின் கொடிய கரங்களில் சிக்கித்தப்பியிருக்கிறேன். அகதிவாழ்வு என்னை ஏழு பாடசாலைகளுக்கு அனுப்பியிருந்தாலும் எட்டாவது பாடசாலையாகிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியே என்னை வெகுவாகப் பாதித்தது. எனது வளர்ச்சிக்கு அந்தக் கலைக்கூடமே களம் அமைத்துத் தந்தது. திரு. கி. நடராசா, திருமதி இ. தில்லையம்பலம் - இவர்கள் இருவரும் கல்லூரிக் காலத்தில் எனக்குத் தமிழின் முகவரி காட்டியவர்கள். எனது தமிழாசிரியர்கள். என்றும் என் வணக்கத்துக்குரியவர்கள். திரு. ந. அனந்தராஜ், திரு. கே. கனகேஸ்வரன், திரு. ப.ஜோதீஸ்வரன் முதலியோர் என்றும் என் மதிப்புக்குரியவர்கள். அவ்அறிவாலயம், அதனோடு தொடர்புடைய அமைப்புக்கள் முதலியவற்றுக்கும், அவற்றைச் சார்ந்தோர்க்கும் என்றும் கடப்பாடு உடையேன். பேராதனைப்பல்கலைக் கழகத்து தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், பேராசிரியர்களான இரா.வை.கனகரத்தினம், க.அருணாசலம், எனது கவிதையின் மீது வாசிப்புக்களை வைக்கும் விரிவுரையாளர் திரு வ.மகேஸ்வரன். ஏனைய விரிவுரையாளர்கள் அனைவருமே எனது வளர்ச்சிக்கு அறிவுரை வழங்குபவர்கள். அவர்களுக்கும் என் நன்றிகள். பல்கலைக் கழகத்து நண்பர்களும் எனது வளர்ச்சிக்குக் காரணமானவர்கள். அவர்களுக்கும் என் நன்றிகள்.

கலாநிதி துரை. மனோகரன் எனது பேராசான்களில் ஒருவர். எனது ஆக்கமுயற்சிகளை ஊக்கப்படுத்துபவர். களங்கள் பல அமைத்துத் தருபவர். தனது பலவகைப்பட்ட



பணிகளுக்கு மத்தியிலும் மனமுவந்து நீண்டதொரு அணிந்துரையை இந்த நூலுக்காய்த் தந்தவர். அவருக்கு என்றும் என் நன்றிகள்.

ஈழத்து இதழியலில் இன்று "ஞானத்தின் காலம்". "ஞானம்" எனக்குக் களம் தந்த இதழ்களில் முதன்மையானது. எனது பெருமளவிலான கவிதைகள் ஞானத்திலேயே பிரசுரமாயின. கூடவே கட்டுரைகளும், பத்திகளும். பெரியார் தி. ஞானசேகரன் மூத்தோர் பலர் இருக்க இளையோரை வளர்ப்பதற்காய் இடம் தருபவர். வாழ்த்துரை தந்து நூலுக்கு வளம் சேர்த்தவர். அவருக்கு என் நன்றிகள். கூடவே தம்பி கே. சர்வேஸ்வரனுக்கும்.

ஞானம், ஏகலைவன், நடுகை, இளங்கதிர், தினகரன், அறிவோர்பக்கம் முதலியவற்றில் எனது கவிதைகள் வெளியாகின. அவற்றின் ஆசிரியர்களுக்கும் என் கடப்பாடு. கல்லூரிகாலத்திலும் களம் தந்த அரங்கம் (கையெழுத்துச் சஞ்சிகை), உதயன் - சஞ்சீவி ஆகியவற்றுக்கும் நன்றிகள் பல.

சு. இ. முரளீதரன் என் உயிர் நண்பர். "ஏகலைவன்" பிரதம ஆசிரியர். இத் தொகுதிக்கான கவிதைத் தெரிவிலிருந்து அனைத்திலும் முன்னின்று உதவியவர். "ஏகலைவன்" வெளியீடாக இந் நூலை வெளியிட விரும்பியவர். நட்புக்கலந்த நன்றிகள் அவருக்கு.

ஓவியங்களால் நூலை அழகுபடுத்தியவர் எனது நண்பர் ஓவியர் எஸ். நேசலிங்கம் (நேசன்). அவருக்கு என் நன்றிகள். புகைப்படக் கலைஞர் எஸ். முரளிதாஸ், கணணியிற் பொறித்துத் தந்த ஆர். ஜே. பி. குமார் தம்பதிகள், சகோதரி சுதர்சினி ஆகியோருக்கும் ச. பாஸ்கரன், அ.ஜீவா, சு.சதீஸ்வரன், அச்சுக்கலையால் அழகுபடுத்திய நண்பர் கேசவன் ஆகியோருக்கும் என் நன்றிகள்.

எனது கல்லூரிக் காலத்து வகுப்பறைத் தோழன் சி.ராஜ்குமார் இத்தொகுதி வெளியீட்டில் முன்னின்று உழைத்தவர். அவரும் பிறேமினி, நந்தகுமார், இராஜேஸ்வரி ஆகியோரும் என்றும் என் அன்புக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

சுவாமி ஆத்மகனாநந்தா, கம்பவாரிதி இ.ஜெயராஜ், எஸ்.சொலமன் ஆகியோரும் கவிதைகளின் செம்மைக்கு

ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கிய ஸ்ரீ பிரசாந்தன், பூ.சோதிநாதன், பா.அகிலன் ஆகியவர்களும் நன்றிக்குரியவர்கள்.

கொடூர யுத்தத்தின் அதிர்வலைகள் காவுகொண்டு அமரரான எனது அப்பாவின் பலகனவுகளில் ஒன்றை இத்தொகுதி மூலம் நிறைவேற்றுகிறேன். மகிழ்ச்சி. தங்களைவிட என்னையே பெரிதும் பேணி எனது உயர்விலேயே மகிழும் அம்மா, சகோதரிகள். இவர்களுக்கு அன்பைத் தவிர சொல்லுவதற்கும், கொடுப்பதற்கும் எதுவுமே ஈடாகாது. எனக்குப் பக்கபலமாய் இருக்கும் தி. நிமலேஸ்வரன், பொ. சுரேஸ்குமார் ஆகியோருக்கும் என் அன்பு உரித்து.

கல்வி கலை இலக்கிய சமய சமூக நிறுவனங்கள் அவற்றைச் சார்ந்த பெரியவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நூலினுள் நுழையப்போகும் உங்களுக்கும் மனம் கனத்த நன்றி.

இத் தொகுதி மூலம் அவ்வப்போது எனக்கு ஏற்பட்ட உணர்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமெனில் அதுவே எனக்குப் போதுமானது.

*"என்னைக் கவலைகள் தின்னத்தகாதென*
*நின்னைச் சரணடைந்தேன்"*

செ. சுதர்சன்

தமிழ்விசேட துறை,
விடுகை வருடம்,
கலைப் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை,
இலங்கை.
21.06.2004



## மாலையிலே

உறுதி கோரல் 01
குளிர் காய்தல் 03
மாறுதல் 05
காத்திருப்பு 07
ஊழின் மீதான பாடல் 09
இரவு போதும் 11
அபலை 13
கல்வாரிப் பயணம் 22
எழுதுகோலுக்கு ஓர் ஏற்றப்பாட்டு 25
இரண்டு மாடுகளின் பயணம் 28
கள்ளுக் கபாலம் 31
கிராமத்துக் கனவுகள் 33
இரவுகள் எழுதிய கவிதை 35
நம்பிக்கை 37
உறக்கத்தின் ஓசையிலே 38
சுயம்? 41
அனலென மனதும் 42
நாங்கள் பைத்தியங்கள் 45
நெடும் பகல் நோக்கி 47
சடத்திலும் ஜீவன் 50
உண்பதற்கு மட்டுமோ உனக்கு விடியல்? 52
முட்களின் பூக்கள் 55
தக்காரை வாழவைப்போம் 58
மற்றுமொரு மாலை 61
காற்றின் காதலி 64



# உறுதி கோரல்

விழப்புண் சுமந்தோம்
விருதுகள் வேண்டோம்

அறுவடை கிடைத்திலயெனினும்
அடுத்தபடியொரு
உழவதும் செய்வோம்

சற்றுமே நில்லோம்
வெற்றிகள் சூழினும்
வேர்த்திடாதோயோம்

இருளதன் சிரிப்பினை
எரித்திட எழவோம்

விழுப்புண்ணதன் வலியும்
கண்டல், காயம்
காய்ந்த மறுக்களும்
பெரும் சொத்தெனக் கொண்டோம்
சோரவும் மாட்டோம்

குருதிகள் எம்மண்ணில்
குந்தாத வரம் கேட்போம்
பரிதியை நாம் தொட்டுப்
பந்தாட விடைகேட்போம்

"நன்றி"

விழுப்புண் சுமந்தோம்
விருதுகள் வேண்டோம்





## குளிர் காய்தல்

உங்களது யாகத்தில்
எங்களுக்கான ஆகுதிகளை
நீங்கள் இடுங்கள்

"யாக குண்டம்"
சிறியதோ பெரியதோ
அதன் அளவும்
எண்ணிக்கையும்
உங்கள் இஷ்டப்படியே அமையட்டும்

யாக மேடையும்
உங்கள் தீர்மானப்படியே

நீங்கள் விரும்பியவாறு
சுவாலை வலஞ்சுழியாக எரியட்டும்

நீங்கள் நினைக்குமளவு
ரத்தமும் நெய்யும்
பெய்யலாம்

உங்களது
நாவுகள் நயக்கும் மந்திரங்களையும்
உச்சாடனம் செய்யலாம்

யாகத்தின் காலம் கூட
உங்கள் தீர்மானம்தான்

கோழிகள், ஆடுகள், மாடுகள்...
இறுதியாக உங்களையும்
அரிந்து பாகமாகவோ
முழுமையாகவோ

யாகம்
உங்கள் விருப்பப்படியே
மிகவும் மிகவும்... பெ...ரி...ய... யாகம்

யாகத் தவறுகளால்
தேவ கோபத்திற்கு உள்ளானால்
தேவர்சபை நின்று உமை எதிர்ப்போம்
ஆகுதிகளால்
அனைவரும் பயனடைந்தால்
"அவிப்பாகப்" பங்கை எடுத்துரைப்போம்

ஆகவே,
எங்களுக்காகப் பிரியமானவர்களே!
உங்கள் தசைகளை
ஒன்றும் விடாமல்
அரிந்து போடுங்கள்
எங்கள் உரிமைகளை
முழுவதுமாகப் பெற





## மாறுதல்

விடுதலைக்கான நினைவுகளை
மின்மினிகளின் ஒளி
இறக்கை விரிக்கும் பறவை
காற்றுத் தெளித்த முகில்

இவற்றின் மீது
குவித்தபடி

இரவின் சிறையில்
உறக்க விலங்குகளில்
மாட்டிக் கொள்ளாது
பயங்கரத்தின் பீதியைத் தின்று

சுடுகுழலின்
குறிபார்த்தலை ஏமாற்றி
வேவுகளின் மோப்பத்திற்குத்
தடம் காட்டாது
மெல்லிய நகர்வுகள்
தொடரும்

அமாவாசைக்
கொடூரத்தினின்றும்
நிலவை விடுவித்து
அதினின்றும்
நிலைபெறுதலுக்கான சிறுகுடிலை
உற்பவிப்பேன்

அப்போது
மின்மினியின் ஒளியாயும்
இறக்கைவிரிக்கும் பறவையாயும்
காற்றுத் தெளித்த முகிலாயும்





## காத்திருப்பு

தொடர்கிறது......

பீதி தோய்ந்து......
காற்றலைகளில்
மறுபடியும்...... மறுபடியும்......
நாய்களின் ஊளை

ஊரே
மயானம் போல உறங்கும்

நேற்றுப் போலில்லை
அந்தத் தெரு

கிளுவை மர இலைகள்
உடைத்துப் போடும்
நிலா ஒளி

அதன் மேல்
பிய்ந்து....
அசையும் மெல்ல
மனித நிழல்

கிடுகு வேலியின்
சரசரப்பு
'சர்.....' என்று சொரியும்
கறையானின் மண்
அவளுக்கு
ஆட்காட்டிக் குருவிகளாய்.....

மகனுக்காய்
மண்சட்டியில்
அவித்த
மரவள்ளிக் கிழங்கோடு
இந்த இரவிலும்
வழமைபோல

"ச்ச்ச்..."
பல்லி மட்டும் சொல்லியது
"இனி
படைக்க வேண்டியது தான்"





## ஊழின் மீதான பாடல்

பாணனின் யாழ் மீட்டல்
இருகிளைகளின் கேண்மையைச்
சந்தேகிக்காத
மரத்தின் கீழ்

வெளியேற்றப்பட்டன குருவிகள்
இசைக்கு இசைவாகுமுன்னே
நேரங்கள் மீதான வரையறுத்தலுடன்
கூடுகலைக்கப்படாது

கூட்டின் குடியிருப்பு மட்டும்
ஒரு கிளையில்

மறுகிளைக் குருவிகள்
"வெளியேற்றம்" தொலைத்த
குருவிகளுக்கான அழகையை
மௌனமாய்
உயிரின் மீதான பற்றுதலூடு

நிரப்பின
வெறுமைகளைத்
தம் இருத்தல்களால்

உறவுக் குறுணிகளைப் பெருக்க
கிழக்கின் மீதான பறத்தலை நிகழ்த்தின

வெளியேற்றுதலை
மீட்புச்செய்ய
ஊழைக்கூட்டிற்று
நாட்களின் உருட்சி

"மீன் பாடலை"
குறுணிக்காய்ப் பயணம்வைத்தவை
பொறுக்கு முன்பே
வெளியேற்றப்பட்டன

அப்போதுமட்டும்
மறுகிளைக் குருவிகளின் ஓலம்
மௌனத்தை மறைத்த அழகை
பாணனின் யாழ்கூட
அபசுரம் மீட்டிற்று





## இரவு போதும்

நான்
இரவுக்குக்
கட்டளையிட்டுக் கொண்டிருந்தேன்
விடியலை எதிர்க்கச்சொல்லி

நாளை
"கறுப்பு ஜூலை"

சுடலைக் குருவியின்
தேசிய கீதத்தோடு
எனது தேசம்
பாய் சுருட்டுவதா?

இரத்தத் தூரிகையால்
எனது தேசம்
துயர்களை வரைவதா?

இந்த இரவு போதும்!
அவலங்களைக்
கருக்கட்டல் செய்யாத

சவப்பெட்டிக் கடைகளுக்கும்
ஒரு சவப்பெட்டி உருவாகும்
நாளை வேண்டாம்

தவளையின் தாளத்தோடு
மின்மினிப் பூச்சிகள்
காற்றுவெளிக்குச் சரம்கட்ட
கீதமிசைக்கும்
இந்த இரவு போதும்

உங்கள் தேசப்படத்தை விடவும்
அழகான எனது தேசத்தையும்
இந்த இரவு
காப்புறுதி செய்யட்டும்

இரவே நில்!
விடியலை எதிர்த்து நில்!

வடதிசையில்
வானத்திலிருந்து
இரவைப் பார்த்து எரிந்தவாறு
ஒரு வெள்ளி....
விருட்சங்களைக்
கண்கள் மீளாய்வு செய்யும்
அத்தனையும் முண்டங்களாய்....





# அபளை

## அபளை - I

வீரிட்டு விரைவேன்

வாய்பிளந்து
வலியின் வீச்சுயர
கக்கும் நீர்த் திவலை...
நகம்
பற்களின்
பரிகசிப்பைத் தேற்ற

கொடூரப்பிடியின் பின்னான
குத்தல்களால்....
என் மன்றாடல்
தொடரும் மரணத்திற்காய்

இரத்தவெறி பிடுங்கிய இதழ்கள்
சாராயவாடையைத் தத்தெடுக்க
தலைமுடியில்
"என் மீதான சபித்தல்களை நிகழ்த்தும்"
எனது கரங்களும்

"ஐயோ!"
"அம்மா!"

என் வாய்பொத்தி
வலிகளை ஆழப்படுத்தி
அழகைமீதான உரிமைபற்றி
பேச மறுப்பாய்

இதழ்களிலிருந்து
உறிஞ்சப்பட்ட சாயம்
விரிந்த தலைமயிர்
தொலைத்த பின்னல்
சேலைத் தலைப்பின்
கிழியல்
இவை பற்றியே
அதிகம் பேசுவாய்



## அபலை - II

குங்கும அழிப்பு
தாலி தறிப்பு
வெறுமையாக்கம்
வெள்ளைக்குள்ளே

"அபசகுனி!"
"அபசகுனி!"

முழவியளத்திலிருந்து
'உதவாததன் முழமை'
நான் குங்குமம், தாலி
தரித்தநாளிருந்து
'ராசாத்தி' இல்லை

அதற்கு முன்புதான்

## அபலை - III

"சதி"
அழியாது
எனக்குள்ளே
முன்னையதை விட மிகவும்....

தலைமுடி முடியா
நாட்களின் நீட்சியை விடவும்.....

நானே
என்னைத் தூக்கி வீசுகிறேன்
ஒவ்வொரு கணமும்
எனக்குள் எரியும் சுவாலையுள்

ஓ....
ராஜாராம் மோகன்ரோஜ்!

வெளியில் மட்டுமா தடை?



## அபலை - IV

என்
வீங்கிய வயிறே
உன் விலத்தல்களுக்குக் காரணி

வெறுப்பைச் சுமந்து
விழிக்கிறாய்
அவதியின் வாதையை
அதிகப்படுத்த

எனதும் உனதும் அற்ற
இருவரினதுமான ஆரம்பநாட்களில்
இருந்தவையே
இப்போதும் என்னிடம்

## அபலை - V

முன்னைநாள் போராளி

மாற்றப்பட்ட எனது நாமம்
ஆறாது கொதிக்கும் வீரப் புண்கள்
துப்பாக்கி தூக்கித் திரண்டதோள்கள்
உயிரினும் மேலாம் 'தாயகம்' சுமந்து
கனத்த நெஞ்சு
நஞ்சினைக் கட்டிய காயக் கழத்து

விடியலுக்கான ஒளியே
இன்றைய இருள்

'வாழ்க்கை'
மறுதலிக்கப்படுகிறது
'இந்த தேசத்தின் புத்திரி'
ஆகையால்



## அபலை - VI

தந்தைக்காக
நேற்று முன்தினம்.

நேற்று
கணவனுக்காக

மகனுக்காக
இன்று

நாளையும்

நாளை மறுதினமும்

அதன் பின்பும்

யாருமில்லை
அழுவதற்கும் இறப்பதற்கும்

## அபலை - VII

மனித மரக்கறி

சந்தைக்கு வரும்போது
கேள்விகள் உயர்ந்து
உலகின் வயசைவிடவும் நீளமாக

விற்கவில்லை

'இன்னொரு சந்தையில்'
வியாபாரி

'இல்லையென்றால்'
விவசாயி

'பரவாயில்லை'
நான்




## அபலை - VIII

இன்று பகலிற்தானே பூப்படைந்தேன்
இருள்
எவ்வாறு விழுங்கிற்று
என்னை

மட்டுப்படுத்தப்பட்ட சுவாசமும்

'உனது நன்மைக்காகத்தான்'
அவர்கள்



## கல்வாரிப் பயணம்

கருவறையிலிருந்தே தொடங்குகிறது
ஈழத் தமிழனின்
கல்வாரிப் பயணம்

பெற்றெடுத்தாள் ஓர் தாய்
பெத்தலகேமாய் இடம்பெயர்ந்து
தன்மகனைப்
பிறர் கொல்வதற்காய்

புகைப்படத்தின் நிழல் கொண்டு
புதைந்த தந்தையின் முகம் பார்க்கும்



பிஞ்சுவயதில் 'தீ' சுமந்த
புன்சிரிப்பற்ற பாலகனாய்

'மாற்றம்' படித்த மாணவனாய்
மரத்தடியில் வகுப்பறை
மதில் கரும்பலகை
கரி வெண்கட்டி

பள்ளிப்பருவ காலத்தில்
வல்லூறுகளின் உறவுகள்
வல்லுறவுகளாகிட
நம் உறவுகளும்
நரியுறவுகளாய்
மரிமகனைக் காட்டி
மாண்டுபோன யூதரசாய்

தார் ஊற்றி எரிக்கப்பட்ட
தந்தையின் நினைவுதினமாய்
தைப்பொங்கல் ஒவ்வொன்றும்

சித்திரவதையில் உயிர் நீத்த
அண்ணனின் நினைவு தினமாய்
சித்திரைப்பிறப்பு ஒவ்வொன்றும்

தீக்கிரையாக்கப்பட்ட
பள்ளித் தோழரின் நினைவு தினமாய்
தீபாவளி ஒவ்வொன்றும்

நினைவுகள் தொடர்கின்றன
நிகழ்வுகள் முற்றுப் பெறாததால்

சிந்தனையெல்லாம்
சிலுவையானதால்
கற்பனையெல்லாம்
கசையடியானது

பொற்கிரீடம் சுமந்த சிரசை
முட்கிரீடம் அபகரித்தது

ஓ.....
சந்திரமதியே!

கேட்கிறதா?


அத்தனை அன்னையரும்
மைந்தருக்காய்க் கதறியழும்

"மாண்டாயோ மகனே"

எல்லோரும்
எம்மை அழிக்கட்டும்

மரணங்களே ஜனனங்களான
மயானங்களில்
இழந்துபோன ஆத்மாக்களின்
எச்ச ஓடுகளிலிருந்து
பீனிஸ் பறவைகளாய்





# எழுதுகோலுக்கு ஓர் ஏற்றப்பாட்டு

எங்கெல்லாம் அநீதி
எங்கெல்லாம் அடிமை நிலை
எங்கெல்லாம் பொய்யின் பூ
பூக்கின்ற வேளைகளில்
என் குருதி கொதிக்கட்டும்
எனைக் குமுற வைக்கட்டும்
என் பேனாப் பீரங்கி
இடியெழப்பி முழங்கட்டும்

உலகம் சமுத்திரமாய்
உதைத்தெறிய வந்தாலும்
உளவலிமை மலையின்மேல்
உட்கார்ந்து உதைத்தெறிவேன்
வந்தென்னிற் தாக்கியது
வலியிழந்து ஓடட்டும்

தாக்கும் போதெல்லாம்
நான்
தவ வலிமை பெறுகின்றேன்
தூற்றும் போதெல்லாம்
நான்
துறவு நிலை அடைகின்றேன்

புல்லைக் காற்றுதைக்கும்
புன்மை நிலை கண்டாலும்
புயலாக மாறிப்
பொங்கிடுமே என் உள்ளம்

புண்ணான அடிமை நிலை
எந்நாளும் ஏற்பேனோ?
ஏற்பவரை
என் அறிவால்
எரிக்காது விடுவேனோ?

அடிமையது செய்யவெண்ணி
அகங்காரத்தோடு
தினம்
நிமிர்கின்ற தலைகளையே
நிட்டூரமாய்
அறிவின்



வாளெடுத்து வீசி
வானத்தில் உருட்டிடுவேன்

விதிவடிவில் வெல்லவென
அடிமையது வந்தாலும்
கவியெழுதும் பேனாவால்
கண்டதனை மாய்த்திடுவேன்
கவியரசாய் நிலைத்திடுவேன்



## இரண்டு மாடுகளின் பயணம்

பயணம் தொடர்ந்தது இருளில்...

மாட்டு வண்டிலின் கீழ்
மங்கலாய் எரிந்த
அரிக்கன் 'லாம்பு' உடைந்தும்
பயணம் தொர்ந்தது இருளில்...

வண்டிற்காரனற்று
நெட்டைநெடுவழியே
நீண்டு பயணித்தது.



வயல்வெளிகள்
காட்டுவழிகள்
என்று மட்டுமல்லாமல்
கரடு முரடான
றோட்டு வழிகளிலும்
சக்கல் சகதியென்று
மிகுதி யெதுவுமில்லாமல்
சாமத்திரை கிழித்துக்
காலைக் கோழி கூவும்வரை
தொடர்ந்து பயணித்தது.

மாமழை
மங்காப் புயற்காற்று
மருட்டும் இடி
கண்ணைக் குருடாக்கும்
கனத்த மின்னல்
காலில் மிதித்து
சினத்தை அறிவாக்கி
பயணம் தொடர்ந்தது இருளில்...

'கிறீஸ்' தின்னாமல்
கிறீச்... கிறீச்... எனும்
சில்லுகளின் சினப்பொலியிலும்
வெல்லுவமெனும் வேட்கையொடு
விரைந்தோடிற்று


வாயிற் பசையாய்
நுரைநீர் சிந்த
ஈன இரக்கமற்ற
இயற்கை வருத்தம்
இருந்து வதைக்க

கழத்திற் சுமந்த
கருமம் நினைந்து
கடபுடென்று
காலமும் கடந்தோடியது

செந்தணல் மிகுந்த
பூமியில் மிதித்துச்
சொந்தங் கொண்டாட
இரும்பு காய்ச்சிச் சுட்டாற்போல்
சொற்சூட்டுப்
பச்சைக் காயங்கள் சுமந்தும்
பிச்சை ஏற்காமல் தொடர்ந்தும்...

ஊனற்று
உறக்கமற்று
உள்ளக்களை தாமறந்து
வீணற்றுப்போகாத
பெருமுயற்சி பற்றி
தண்மதியை நோக்கித்
தாம் சிரிக்கும் குழந்தையர்போல்
கிட்டக்கிடக்கும் வெற்றிக்கொடியை
எட்டிப்பிடிக்க முகமலர்ந்து
ஓடிய மா மாடுகளில்..
ஒன்று...!
மற்றொன்று....!





## கள்ளுக் கபாலம்

இடம் பெயர்த்தியது
எரிப்பிடத்தைக்கூட

எரியும் சமாதி
சுவாலை அணைந்து
தணல் நூர்ந்து
அமைதியாக

எரிந்த சாம்பலிலும்
எரிந்தவரின் அமைதி

ஊழிக்கூத்துக்காக
"கள்ளுக்கபாலம்"
அவர்கள் கையில்

உறவுக்காரர்கள்

மடத்து மூலையில்
கையில் கத்தியுடன்
வெள்ளை மொட்டாக்கினுள் குந்தியபடி
எரிந்து போன சுமந்ததோளினதும்
தாலியற்றுப்போன கழத்தினதும்
நினைவுகளுள்
நான்

கருகிக்கிடக்கும் சுள்ளிகளுக்குப்
பாலைப் பருக்கியபடி
கள்ளிகள்





## கிராமத்துக் கனவுகள்

கிராமத்துக் கனவுகளைக்
கிண்டி எடுத்துத்
தின்று தின்று மீண்டும்
திருப்தியடையாமல்
நின்று விழிக்கின்றேன்

தென்னைகளின் அணிவகுப்பு
தேகம் சிலிர்க்க நிற்கும்
பனைமரத்தின் பரவலாக்கம்
கண்ணைத் துயிலவைக்கும்
காற்றுவெளி
பூப்படைந்த

பெண்ணைப் போலிருந்த
பேரழகுச் சிற்றூரே!
உன்னைப் பிரிகையிலே
உள்ளம் கனக்கிறது

உருக்குலைந்து
உன் பொட்டிழந்து
கட்டழகு மேனியிலே
இரத்தக் கறைபடிந்து
காடாய்க் கிடக்கும் உந்தன்
கதை படித்துத் திரும்புகையில்
பாடாய்ப்படுத்தும் நெஞ்சு சுமக்கிறேன்

வட்டிழந்த பனைமரத்தில்
செருக்கு எங்கே?
கட்டுடைந்த கழனிகளில்
திலகமெங்கே?
குண்டு பட்டுடைந்த பண்ணைகளில்
பரிவு எங்கே?
உன்கட்டழகுக் கைகளாய்
நாம் கதைபடித்த தெருக்களெங்கே?

அத்தனையும் அழிந்த
என் அனாதைச் சிற்றூரே!
சற்றும் உனைப் பிரியமனம்
மறுக்கிறது
சரி, கடமை
கற்று முடித்து
உன் கதைவடிக்கக்
காற்றாகி நான் வருவேன்
காத்திருப்பாய்





## இரவுகள் எழுதிய கவிதை

இரவுகள் எழுதிய கவிதை

அச்சம் துக்கம்
அழகையென்று இவற்றால்
என்னை உலுப்பி
என்னை உருக்கிய
இரவுகள் எழுதிய கவிதை

ஓலக்குரல்கள் ஒன்றுபட்டுடைய
நீள விழிநீர் விழமுன்
விரைந்து...
விழுந்த விழிகள்


விடியலைத் தேடிட
இரவுகள் எழுதிய கவிதை

சோகச்சிதையில் மூட்டிய
தேசச் சிற்பிகள் வீழ
சிப்பிகள் ஆள
சாவுக்கு அறை கூவிய ஒலிகள்
சரித்திரச் செவியின்
சாலையில் உலவ
இரவுகள் எழுதிய கவிதை

தேசச்சிமிழி
உடைந்து போய்விட
நீசக்காற்றும்
சுடரை நூர்த்திட
வாசற்படியில்
வடிந்த குருதிகள்
வந்த தாய்முலை வாசலைத் தேடிட
இரவுகள் எழுதிய கவிதை

அச்சம் துக்கம்
அழுகையென்று இவற்றால்
என்னை உலுப்பி
என்னை உருக்கிய
இரவுகள் எழுதிய கவிதை






## நம்பிக்கை

விடிகிறது!

மரணத்துக்கான
விளக்கேற்றலாய்
நாள் ஒவ்வொன்றும்

ஒவ்வொரு பகலையும்
இருள்
தனதாக்க...



## உறக்கத்தின் ஓசையிலே

வேண்டும் வேண்டுமென்று
விழித்துத் தவமிருக்க
வாணி இறங்கி வந்தாள்
வலக்கை வீணையொடு

இருத்திக் கொடுக்கஅல்ல
இசைத்துக் கொடுப்பதற்கு
பசித்துக் கிடந்த
எங்கள்
பசிக்கு இரையை அவள்
பாட்டில் வடிப்பதற்கு



வேட்டுவரைந்த துயர்
வெட்டிவிலக்க
இசை
மீட்டால் மிடுக்கு வரும்

கேட்டால் கிலுகிலுக்கும்
பாட்டால்
பாரிலிவள்
போட்டாளே ஓர் பூட்டு!

இடியொழிந்து இங்கிதமாய்
இசைபிறந்த தெப்படியோ?

கடிமலிந்த கற்களிவை
பொடிபொடியாய்ப் போகும்படி
இடியொழிந்து இங்கிதமாய்
இசைபிறந்த தெப்படியோ?

நாட்டு நரம்புகளை
நல்லபடி இழத்து
இவள்
கோட்டில் வளைத்துக்
கொழவிப் பிடிதிருகி
ஒரு பாட்டு வடித்தாள்

ஆஹா! கொண்டாட்டம்
சேட்டுப் போட்டுக்கொண்டு
றோட்டிலே தமிழ்த் தலைகள்

நாட்டிலே ஒப்பாரி
நலிவுற்றுப் போயிற்று

காற்றிலே பிணவாடை
கழிபட்டுப் போயிற்று
சோற்றிலே
நிவாரணச்
சொல் மறந்து சீவிக்கும்
ஆற்றுப் படலமொன்று
ஆரம்பமாயிற்று

நாற்றுப் பயிர்களதை
நல்லபடி வளர்க்க
இசை
சேற்றில் வயல்உழது
செய்ததுவோ ஓர் உழவு

நோர்வே நாட்டுழவா நில்!
தார் மாலை தந்தேன்
நீ
போட்டுக் கொள்
இடியேதும் மூழாமல்
பார்த்துக் கொள்

தோள்பிடித்துத் தலையரிந்து
தொங்கவிட்ட நாட்கள்போய்
கால்மடித்துக்
கச்சிதமாய்த் தூங்குகிறோம்

உறக்கத்து வேளைகளில்
உயிர் துறந்த உறவுகளைத்
துறக்கத்தான் ஆசையில்லை
உறக்கத்தின் ஓசையிலே
உயிர் மறந்து தூங்குகிறோம்






## சுயம்?

"இருத்தல்" இயல்பற்றுப் போயிற்று
பார்த்தல்
ருசித்தல்
நுகர்தல்
உணர்தலும் கூட

சிரித்தலும் அழுதலும்
சிலர் இயக்கத்தில்

இறத்தலுக்கு மட்டுமே நிகழும்
உன் 'இருத்தல்' நோக்கிய திரும்புகை

பிறப்பைப் போலவே
அதுவும் பிறர்கையில்



## அனலென மனதும்

பலாவிலை மடிப்பினுள்
கூழாய்...
எனக்குள் நீயும்
உனக்குள் நானும்
இருந்து தொலைந்தோம்

இணைவுள் இருந்த
முடிச்சுகள் அறுத்து
பிரிந்து சென்றாய்

அவிந்து போன
கோடைக்கால விடுமுறை நாட்களும்



வாடைக்காற்றும் தனது வலிமையை
வரையவெண்ணி வந்தெமில் மோதி
வதைகள் செய்து பிரிக்க முயன்றதாம்
முட்டி மோதியே முற்றும் தோற்றது

காற்றுத் தனக்குள் கன்னக் குழியுள்
கல்லறை கட்டக் கடுந்தவம் புரிந்தது
வேற்று மரங்களும்
வியர்த்ததெம் காதலால்
கூட்டுப் பறவையும்
குஞ்சுகள் பொரித்தன

கரத்திலிருந்த இனிப்புகள் கூட
கசப்புகள் செய்தன
நமக்குள் இருந்த கசப்புகள் மாறிச்
சீனிப்பாணியாய்ச் சிறகைவிரித்தன

இதழ்கள் பாடிய இன்பப் பாட்டிற்கு
இன்னிசைக் குயில்களும் தோற்றுஓடின
பயல்கள் சிலபேர் பார்த்து ரசிக்க
வயல்கள் மட்டுமே வணக்கம் செலுத்திற்று

அயலோர் அறியா இடங்களிலெல்லாம்
அரசினை அமைத்தோம்
அரசியாய் - நீயும்
அரசனாய் - நானும்
ஒருவரில் ஒருவர்
ஆட்சிகள் செலுத்திச்
சாட்சிகள் இல்லாச்
சமர்பல புரிந்தோம்

தோற்றதும் இல்லை
வென்றதும் இல்லை

நேற்றதன் நினைவுகள் நெஞ்சினில் தொடரப்
பூத்ததோர் நெருப்பில்
புழுங்கிப் போகிறேன்

ஆற்றிடைஎரியும்
அனலென மனதும்
காற்றிடை வைத்த
கடலென உடலும்





## நாங்கள் பைத்தியங்கள்

நம்பி நம்பி ஏமாந்த
நாங்கள் பைத்தியங்கள்

எங்கள் கால்களில்
இனவாத விலங்குகள்
அவர்கள் கால்களில்
செருப்புகளாக
நாற்கலிகளாக
துடைப்பங்களாக
விளம்பரங்களாக
நாங்கள்

பட்ஜெட்டில்
கைச்சாத்திடும் பேனாவுள்
எங்களில் உறிஞ்சிய இரத்தம்!

எங்கள் மீது வீசப்படும்
கந்தகப் பூக்களின் விசையிலும்
நாங்கள் கட்டிய வரிப்பணம்!

எங்கள் கழுத்தை நோக்கிவரும் கத்திகள்
எங்கள் கம்மாலைகளில்
நாங்களே வடித்தவைகள்!

நாங்கள் பைத்தியங்கள்
நம்பி நம்பி ஏமாந்த
நாங்கள் பைத்தியங்கள்





## நெடும் பகல் நோக்கி

முற்றத்துப் பலா!

முறையாகக் காய்த்திருந்த
காய்கள் பற்பல
கொக்கத்தடி கொண்டு
கொழவிக் காய் பறித்துக்
கொடிகாமச் சந்தைக்குக்
கொண்டு சென்றதொருகாலம்

அது பறந்து....

எக்காளப் பாட்டுடன்
'புக்காரா' வந்து
போட்ட குண்டுச் சன்னம் பறந்து
அதன் இலைகள்
சருகுகளாய்ப் போய்விடவும்

கொத்தித் தின்று களிக்கும் குருவி
கூடுகட்டி வாழ்ந்த
அக்கொப்புகளும்
வளைகப்புக்கு உதவுமென்று
அப்பு நினைச்சு வைச்ச
அந்த நெடு உருப்படியும்
செத்துப் போகும்படி
'ஷெல்' பட்டு வீழ்ந்ததுவும்

ஆடியிலே பிறக்கும்
மகள் பெடியன்
ஆடிக்களிக்கவென
ஊஞ்சலுக்காய் உச்சியிலே
கிடையாய்க் கிடந்திருந்த
பருத்தகொப்பை
பருத்துறைக் கடல் கக்கிய
பீரங்கிக் குண்டு
பிடுங்கி எடுத்துப்
பின்வளவில் போட்டதுவும்


மீதி கிடந்த பிஞ்சுகளும்
மிடுக்காய்
அழகடித்த அச்சுகளாய்ப்
பூத்தவையும்
கந்தகப் புகையாற்



கருகிச் சுருண்டு
வெந்து மரக் காலடியில் வீழ்ந்து
விம்மி அழுதன
என் செய...?

'இன்று' நலிந்து
இனிப் பிறக்கும் நாளையிலும்
பிஞ்சுகள் விழலாம்
பூக்கள் உதிரலாம்
கஞ்சியும் இன்றி
வாழ்க்கை ஓடலாம்
நெஞ்சுகள் நிமிர்த்தயென்
பேரன் பிறப்பான்

நின்றும் இருந்தும்
நீட்டிப் படுத்தும்
'நேர்த்தி'யின் நினைவுடன்
நெடும்பகல் நோக்கி



# சடத்திலும் ஜீவன்

ஒளிந்து கொண்டது!

வீட்டறையின்
கோற்காலிக்குக் கீழ்
எங்கள் குடும்பம்
வெங்காயம் கூரையாக

"உஸ்..."
அம்மா

காற்றை நனைக்கும்
சிகரெட் நாற்றம்
பழைய சப்பாத்தியோடு சேர்ந்து
ஒக்ஸிஜினை உறிஞ்சிக் கொள்ளும்



உணர்வுகளைத் தூக்கிலிடும்
சப்பாத்துகளின்
'டக்... டக்...'

தலைப்பாகை,
தாடி,
ஏ. கே 47

ஜன்னல் கண்ணாடியூடு
நிழல்களின் அச்சுறுத்தல்
வேட்டைக்கு ஏகும்
குருநானக் சிஷ்யர்கள்

அப்பா
'உஸ்...'


என் கரத்தால் வலிக்கும்
அம்மாவின் கரம்
மடியில் தங்கை
அரைத் தூக்கத்தில் அலட்டி விடுவாளோ!

ஓ...!
ஜன்னலின் வெளித்தட்டில்
பவுடர் பேணிக்குள்
மாலை
தங்கையுடன்
உருட்டி விளையாடிய மாபிள் போளைகள்

யாராவது எடுத்துவிட்டால்?

"அம்மா...!"

மறுபடியும்
"உஸ்..."



# உண்பதற்கு மட்டுமோ உனக்கு விடியல் ?

பொங்கலுக்கு மட்டும்
கங்குல் உரிஞ்சு
கதிர் காட்டும் சூரியனை
அங்குலத்துக் கங்குலமாய்
ஆளுக்காள் காத்திருப்போம்

விடியல்த் தாவானம்
விண் அனுப்ப
மண்ணிறங்கி
வீசுகின்றவரைக்கும்தான்
இருள் நீக்க
விண் அளப்போம்



வெளிச்சக் காற்றடிக்கும்
வேர்க்க இருள் விரைந்தோடும்
பட்டாடை உடுத்தபகல்
பார்க்கப் பார்க்கப்
பண்சுமந்த பாட்டிசைப்போம்

கண்சுமந்த நித்திரையைக்
கசக்கி எறிந்து விட்டு
மண்சுமக்கும்
சூரியனின் வெள்ளொளியை மகிழ்விக்க
மண்துடைத்தே
இடுவோம் மாக்கோலம்

மஞ்சள் தெளித்து
மங்கலமாய்த் தூபத்தை
மனைக்காற்றில் ஒட்டிவிட்ப
"பொங்கும்" புகைஎழுந்து
போர்வையிடும்
எங்கும் இன்பம்
எழுந்து நடனமிடும்

மாவிலைகள் மடித்து
மணியாய் மணியாயத் தோரணங்கள்
மங்கலமாய்க் கட்டிவிட
எங்கள் மனைசிரிக்கும்

பொங்கக் கல் தேடி
அதன் பொருக்ககற்றக் குளிப்பாட்டி
தீ சுமக்க வேண்டுமெனத்
திலகங்கள் இட்டிடுவோம்
தொழவங்கள் கூட்டித்
தொட்டதெலாம் மினுக்கி
அழக்குகள் என்றுள்ள

அனைத்தினையும் அகற்றி
ஆநிரையை அலங்கரித்து
அடித்ததற்காய்
அமைதிகொள்வோம்

பட்டாசு கொழுத்திப்
பாங்காய் உடை உடுத்து
தட்டாது தாமதிக்கும்
சமயத்தின் பொருளுணர்ந்து
விட்டோதும் அன்பதனை
உள்ளமதில் விளைச்சலிட்டு
எப்போதும்
நாமகிழும் பொங்கலென்று
போற்றிநிற்போம்

பால்பொங்கும்
பொங்கற் பானை தனைக்கண்டால்
நாம் பொங்கிக் களிப்போம் - நாம்
பொங்கியெழவேண்டிய பொழுதெல்லாம்
பொங்கியெழாமல்
போர்த்துப் படுத்திருப்போம்

சூரியனைக் கேட்டேன்

"இரவுக்காய்ப் பகல் உழதாய்
அந் நன்றிக்காய்
நாம் சமைக்கும்
பொங்கலை நாடித்தான்
நாளைக்கும் வருவாயா?"

சுட்டெரிக்கச் சொன்னான்

"உண்பதற்கு மட்டுமோ
உனக்கு விடியல்?"





## முட்களின் பூக்கள்

முட்கள்!

பூக்களின் கருவறை
புயல்களின் பிறந்தகம்

மொட்டுகள்
இதழ் விரிக்கையில்
வண்டுகள்
கலவிசெய்யும்
முட்கள் குவிகையில்
மானிடம் கர்ப்பமுறும்

தேவனுக்கு
நாம்
பூக்களை மட்டுமே தூவுகிறோம்
எமக்கு
அவன்
முட்களையும் தருகிறான்
முட்களால்
நாம் பூக்களாகிறோம்

மலர்கள் விரிகையில்
ஆசையலை பாய்கிறது
முட்கள் தைக்கையில்
அலறல் ஓசையாகிறது
மலர்கள் வாடும்போது
ஆசைகள் கசங்கிப் போகின்றன
அலறல்கள்தானே
புரட்சியை அச்சடிக்கின்றன?

முட்கள் கிழிக்கையில்
அறியாமை பாய்விரிக்கும்
அறிவு பாய் சுருட்டும்
முட்கள்
ஞானத்தின் அரிச்சுவடி!


மலர்கள் நம்மைக்
கசக்குகின்றன
முட்கள் நம்மைச்
சலவை செய்கின்றன
முட்கள்
சாந்த சுகமளிக்கும் சவர்க்காரம்!



இறைவன்
முட்களின் காதலன்
அதனால்தான்
மலர்களைவிடவும்
முட்களிற்கு
நீண்ட ஆயுட்காலம்

நாம் மலர்களைச் சூடுகிறோம்
முட்களை வீசுகிறோம்
முட்களின் முடிதானே
இயேசுவுக்குப் பிடித்திருக்கிறது

மலர்களின் மொழி
அஸ்தமனத்தில் வீணாகிறது
முட்களின் மொழி
அந்திமத்திலும் தேனாகிறது



# தூக்காரை வாழவைப்போம்

சிந்தை அழியும்
சிதைந்தொருகால் நினைவழியும்
தந்தையிருக்க இங்கு
தனயன் உயிர் அழியும்
என்தாய் என்சுற்றம்
என்றுரைக்க முடியாமல்
எச்சமின்றி இங்கு நிதம்
எல்லாம் அழிந்துவிடும்

பிச்சைக்கும் நாளுமிங்கே
பிணத்துக்கும் குறைவில்லை
கொச்சைகள் நீக்கிக்



குணம்நாடு மானிடமே!
இச்சைகள் புரிந்தாய்
இருள்தனிற் குளித்தாய்
வாழ்வில்...
தச்சமுள்ளெடுத்து நீ
தரிசனம் தாராயோ?

நொச்சி அவிச்சு
உன் நோதடவி நீ எழம்பி
எச்சில் இலை வாழ்க்கையதை
எடுத்தெறிந்து விட்டு
பொச்சுமட்டை என்றாலும்
போதுமென்ற அடுப்போடு
வைச்சுவிடு சுகமெல்லாம்
வையகத்தில் நீ பெரியோய்

வெக்கி நின்றாய்!
எட்டி நின்று எழம்பி உதைத்து
எதிரி கக்கிவிடும் குண்டுகளைக்
கடைசிவரை ஏந்தி
நக்கிரத்தம் குடிக்கவரும்
நாய்களிடம் கடிபட்டும்
தப்பியோட எண்ணமோ?
சரிப்பட்டு வந்திடுமோ?

பிஞ்சுக் கரங்களிங்கு
பிச்சைக் கரங்களாக...
தஞ்சமற்ற வாழ்வு
எங்கள் சரித்திரத்தில் தஞ்சமுற
மிஞ்சுவது என்ன?
உன் மீசையொடு மிடுக்கோ?

நீ அஞ்சுவது அவ்வளவு நல்லதல்ல
பொங்கியெழு.

நிக்காமல் ஓடி
நிலம்விட்டுப் பறந்து
வேற்று நாடு புக்காரை,
வெறும் தீமைகளை
இங்கனுப்பி நிப்பாரை,
கொக்காரை பன்னாடை
கொண்டெரித்து நாமிங்கே
தக்காரை வாழவைப்போம்.





## மற்றுமொரு மாலை

என் மனசும் வலிக்கும்
எதிர்வீட்டு ஒற்றைக்கதவின்
தனிமையூடு
ஊடறுத்துப் போன வீதிக் காற்றுக்கும்
விக்கி வலிக்கும்

உன் தோட்டில் ஊஞ்சல் கட்டி
ஆடியயென் ஆசையெலாம்
வீட்டில் விழுந்து விம்மிஅழும்

சேட்டில்
நீ வடித்துப்போன முத்தங்கள்
செயலற்றுப் போயிருக்கும்
ஏட்டில் எழுதிவைத்த கவிதையெலாம்
உன் பெயரைக்
கேட்காது பொருளிழக்கும்

சொட்டுத்தூறல்கள்
சொகுசான காற்று
சற்றும் விட்டு விலக
மனம் மறுக்கும் மாலையிலே
எட்டியடி எடுத்துவைத்து
எங்கு சென்றாய்?


மறுநாள் உதிப்பதற்கா?
இல்லை
'மற்றுமொரு மாலை'யிலே
புகுவதற்கா?

தொற்றி நின்று
சுகம்கொடுத்துப் போனவளே!
நான் உயிர் பற்றிநிற்க
அப்பற்றறுத்து
அது வெற்றிடமேயென
வெளிப்படையாச் சொல்லிவிட்டு
சுற்றி நிற்கும் "முள்வேலி"
பற்றி எரிவதற்காய்ப்
பறந்தவளே!



கட்டிய கிடுகுக்குள் செருகிய உன் கடிதம்
நீ விட்டுப் பிரிந்த கதை சொல்ல
விறைக்கும் நெஞ்சு
உன் பொட்டழித்து
பொலிவான தோடகற்றி
கட்டிவளர்த்த ஆசையெலாம் கத்தரித்து
கானகத்துட் புகுந்தவளே!

'மற்றுமொருமாலை'
உந்தன் கழுத்தில்வீழும்
அது மண்ணிருக்கும் வரையிலும்
உன் பெயரைப் பேசும்



# காற்றின் காதலி

காற்றுச் சோடிச்சுக்
கவிழ்ந்து குடைவிரிக்கும்
காட்டுத் தேக்குமரத்தடியில்
கால் நீட்டித் தாள்விரித்துக்
கோல் நாட்டிக்
கவிதைப் பால் காய்ச்சக் காத்திருந்தேன்...

நொந்துபட்ட பல முகங்கள்
வந்தென்முன்
வந்தனை செய்தன
வகை வகையாய்...



செம்மணி ஓலங்கள்
தேயிலை கொய்கின்ற தேசத்துக்
கண்மணிக் கவலைகள்
எனப் பலவாய்ப் படர்ந்துசெல...
பாவுக்காய்க் காத்து நின்ற சொற்கள்
கால்விறைத்துக் கோபத்தைக் கக்கின
கவிதைத் தாகத்தில் எனை மறந்தேன்

இதழ் தொட்டுப் பிடித்து
ஒருவரி எழுதமுன்பு
எட்டிவந்த காற்று
தாளை எடுத்துத் தரையிலே போட்டுக்
கட்டிப் புரட்டிக் கலவி செய்தது
கெட்டுப் போகவில்லை
காற்றும் காதலிக்கும் என் கவிதை.

சொற்களின் சுயம்வரத்தில்
"மற்றுமொரு மாலை" யோடு
செ.சுதர்சனின் வருகை!

கங்குலின் கருவறையிலிருந்த வார்த்தைகள்
இனிக்கும் நெருப்பாய்
இவன் கவிதைக்குள்
இடம் பெயர்ந்திருக்கின்றன

இக்கவிக் குழந்தைகளில்
சிலவற்றை
பிரசவத்தின் போதே
அருகிருந்து தரிசித்தவன் நான்

குளிர்காற்றுக் கிளுக்கிண்டும்
பேராதனையில் மையங்கொண்டாலும்
இவனுக்குள்
செம்பாட்டு மண்பற்றிய சிந்தனைகள்
இவைதாம்
கவிஞனை உரசிப்பார்க்கும் உரைகல்!

உள்ளிருப்பவை
கற்பனைத் தேருக்குச் செய்த
ஒப்பனைகள் அல்ல
கால் நடையாகச் செல்லும்
யதார்த்தங்கள்!

இக் கவிவித்து
தரை தட்டி முகிழ்க்கும், உயரும்,
கிளை விரிக்கும், விழுது விடும்,
தேன் துளிக்குள் இல்லை நம் தேசம்
ஆனாலும், கவி விழுதை அங்கீகரிக்கும்

நட்புடன்
இ.சு.முரளீதரன்
பிரதம ஆசிரியர்
ஏகலைவன்